**காயல்பட்டணம் நகராட்சியின் 04.06.2020ம் தேதிய அவசரக்கூட்டம்**

**<u>மன்றப்பொருள்: 1 </u> தீர்மான எண் : 2022** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணியால் சேதமடைந்துள்ள சாலைகள் மற்றும் மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளை மேம்பாடு செய்ய தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு நிதி 2020-21ன் கீழ் கீழ்க்கண்ட விபரப்படியான சாலை மேம்பாட்டுப்பணிகளை அரசிடம் மானியம் பெற்று செய்து முடிக்க மன்றஅனுமதிக்கு.

| Sl. No | List of works | Length (in Km) | Width (in M) | Estimate Amount (In lakhs) |
|---|---|---|---|---|
| 1 | **<u>PACKAGE No.1</u>**<br>Providing BT Surface at Lakhsmipuram street road,L.R.Nagar street road,Bass nagar street road,Jailani nagar street road,Mela lakhsmipuram street road,Mohadum Alavudeen thottam street and Visalatchiammankoil street (Bus stand Back side road) | 3.490 | 4.00 | 190.00 |
| 2 | **<u>PACKAGE No.2</u>**<br>Providing BT Surface at Poonthottam street road, Aliyar street road,,Quithemillethnagar street road,Billalapalli street road,Keemukacheri street,Ambala maraikar street,and Kuththukal street road | 3.710 | 4.00 | 190.00 |
| 3 | **PACKAGE No.3**<br>Providing BT Surface at Uchimahaliammankoil west street , Mahalra colony street road,Siththan street to Nainar street road,Sathukkai street road,Aruciyapalli street road,Kattuthaika street road,Kulamsahib thambi thottam road and Mutharammankoil street | 3.765 | 4.00 | 190.00 |
| 4 | **PACKAGE No.4**<br>Providing BT Surface at Muniyasamy koil street ,Ekkiyappathaika street road,Inootrinangaiammnkoil street,Kadayakudi cross street road,Tiruchendur road KMT Opp,Essakkiammankoil street (Avanseyal colony),G.Hospital road,Komanpudur North street road, Keelanainar st east street road and Kadayakudi Manuvelvilai street road | 3.315 | 4.20 | 190.00 |
| | **TOTAL ESTIMATE AMOUNT** | **14.280** | | **760.00** |

ஆணையாளர்(பொ)
(ம) தனி அலுவலர்
காயல்பட்டணம் நகராட்சி

<u>காயல்பட்டணம் நகராட்சி</u>
<u>ஜுன்மாத மன்றப்பொருள்</u>

<u>மன்றப்பொருள் 1 **தீர்மான எண் : 2023**</u> அனுமதிக்கப்பட்டது

மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவு படி, உள்ளாட்சி அமைப்புகளில் சட்ட மன்ற உறுப்பினர் தொகதி மேம்பாட் திட்டம் 2019–20, மற்றும் பொது நிதி 2019 –20ன் கீழ் பணிகள் செய்யும் பொருட்டு ஒப்பந்த கோருவது தொடர்பாக தமிழ் சுடர் பத்திரிக்கையில் விளம்பரம் செய்த வகைக்கு செலவு தொகையாக ரூ.14,700/–னை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண். 1142/2019/இ1</u>

மன்ற பொருள் 2 **தீர்மான எண் : 2024** அனுமதிக்கப்பட்டது

காயல்ட்டணம் நகராட்சியில் தூய்மை பணியளர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் ஆகியோர் பயன்படுத்திய மருத்துவ பொருட்கள் மற்று கழிவுகளை பாதுகாப்பன முறையில் அழிப்பதற்காக, ஆஸ்பெக் சிஸ்டம், திருநெல்வேலி என்ற நிறுவனத்துடன் 06.05.2020 அன்று செய்து கொண்ட ஒப்பந்தம் படி, மேற்படி நிறுவனமானது இந்த கழிவுகளை (4.00கி.கி) இந்நகராட்சியில் இருந்து பெற்று பாதுகாப்பான முறையில் அழிக்கப்பட்டதற்கு கட்டணமாக தொகை ரூ.12000/– னை பொது நிதியில் இருந்து செலவு செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>
அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண். 369/2020/அ4</u>

<u>மன்றப்பொருள் 3 **தீர்மான எண் : 2025**</u> அனுமதிக்கப்பட்டது

தற்பொழுது பரவி வருகின்ற உயிர்கொல்லி வைரஸாகிய கொரோனா பரவலினால் ஏற்பட்டுள்ள அசாதாராண நிலைமையினை எதிர்கொள்ளும் வகையில் இந்நகராட்சி பகுதிகளில் உள்ள 23 சாலையோர வியாபாகளுக்கு நிவாரண நிதியாக, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனமதியின்படி 2வத தவணையாக பெறப்பட்ட தொகை ரூ.23,000/–த்தினை அவர்களின் வங்கி கணக்கில் வரவு வைத்திட ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>ந.கஎண். அ4/0370/2020</u>

<u>அலுவலக குறிப்பு–</u>
ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின்படி
நடவடிக்கை எடுத்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

மன்ற பொருள் 4 **தீர்மான எண் : 2026** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் தற்போது பரவி வருகின்ற கோரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி நிர்வாகத்தினால் எடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் போது உருவாகின்ற பையோ மெடிக்கல் கழிவுகளை அகற்றுவதற்கு ஏற்கனவே அஸ்படிக் சிஸ்டம்ஸ் பையே மெடிகல் கழிவு மேலான்மை, திருநெல்வேலி என்ற நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, தற்போது கடந்த மே 2020ம் மாதத்திற்கு, பயோ மெடிக்கல் கழிவுகள் அகற்றப்பட்டதற்கு தொகை ரூ.12,000/—னை (ரூபாய் பன்னிரெண்டாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு—</u>
அனுமதி வழங்கலாம்.

<u>ந.க. எண்.369/2020/அ4</u>

மன்ற பொருள். 5 **தீர்மான எண் : 2027** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் பணிபுரிகின்ற பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம், தூத்துக்குடியில் இருந்து மல்டிவைட்டமின் மற்றம் சின்க் ஆகிய மருந்துகள் முறையே 2000 எண்ணங்கள் பெறப்பட்ட வகைக்கு தொகையாக ரூ.1503/— னை (ஆயிரத்து ஐநூற்றி மூன்று மட்டும்) நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு—</u>
அனுமதி வழங்கலாம்.

<u>ந.க. எண்.369/2020/அ4</u>

மன்ற பொருள் 6 **தீர்மான எண் : 2028** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக பொது மக்கள் அறியும் பொருட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்த, 2 பக்கங்கள் கொண்ட கலர் லீப்லெட்ஸ் 10000 எண்ணங்கள் அச்சிட்ட வகைக்கு, செலவு தொகையாக ரூ.21,000/— னை (இருபத்தி ஒன்றாயிரம் மட்டும்) பியர்ல்கிராபிக், தூத்துக்குடி என்ற நிறுவனத்திற்கு நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு—</u>
அனுமதி வழங்கலாம்.
<u>ந.க. எண்.369/2020/அ4</u>

மன்றப்பொருள் 7  **தீர்மான எண் : 2029**  அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் விதி எண். 15ன் கீழ் அவசர அவசியம் கருதி ஜீன் 2020ம் மாதத்திற்கு செலவினங்கள் மேற்கொண்டதற்கும், அதற்கான பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—
மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

மன்றப்பொருள் 8  **தீர்மான எண் : 2030** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் கோரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக, மாவட்ட ஆட்சியர் மற்றும் பொது சுகாதார துறை, தூத்துக்குடி மூலம் அறிவுறுத்தப்பட்டதன் படி, இந்நகராட்சி பகுதியில் வெளிநாடுகளில் இருந்து வரும் நபர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் வகையிலும் பொது மக்கள் கூடும் முக்கிய இடங்களில், இது குறித்த விழிப்புணர்வு விளம்பர பதாகைகள் வைப்பதற்கும், ஆட்டோ மூலம் விளம்பர செய்வதற்கும், பொது இடங்களில் தெளிப்பதற்கு ஏற்றவாறு கிருமிநாசினிகள் மற்றும் தூய்மை பணியாளர்கள் அணிவதற்க்காக முககவசம் மற்றும் இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும், அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்வதற்கும் அதற்கான செலவினங்களை, உத்தேச செலவின தொகையாக ரூ.25.00 த்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்து, பின்னர் அதனை அரசால் வழங்கப்படும் மானிய நிதியில் இருந்து ஈடு செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—
தற்போது உயிர்கொல்லி நோயாகிய கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக
பொது மக்களின் நலன் கருதி அனுமதி வழங்கலாம்.

ந.க. எண்.369/2020/அ4

மன்ற பொருள்: 9 **தீர்மான எண் : 2031**அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் தற்போது பரவி வருகின்ற கோரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி நிர்வாகத்தினால் எடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் போது உருவாகின்ற பையோ மெடிக்கல் கழிவுகளை அகற்றுவதற்கு ஏற்கனவே அஸ்படிக் சிஸ்டம்ஸ் பையே மெடிகல் கழிவு மேலான்மை, திருநெல்வேலி என்ற நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, தற்போது கடந்த ஜீன் 2020ம் மாதத்திற்கு, பயோ மெடிக்கல் கழிவுகள் அகற்றப்பட்டதற்கு தொகை ரூ.12,000/—னை (ரூபாய் பன்னிரெண்டாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—
அனுமதி வழங்கலாம்.

ந.க. எண்.369/2020/அ4

**மன்றப்பொருள்:10 தீர்மான எண் : 2032** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2019-20ன் கீழ் நகராட்சிப்பகுதியான இரத்தினாபுரியில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணிக்கு 24.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) திரு.எஸ்.வித்யாசாகர்,
நடுவக்குறிச்சி
சாத்தான்குளம் — மதிப்பீடு ரேட்டை விட 0.007% குறைவு

2) திரு.எஸ்.குமரேசன்
12 வணிக வளாகம்
திருச்செந்தூர் — மதிப்பீடு ரேட்டை விட 1.83 % கூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.வித்யாசாகர்,சாத்தான்குளம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**மன்றப்பொருள் : 11 தீர்மான எண் : 2033** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் பொதுநிதி பணிகள் 2019-2020ன் கீழ் நகராட்சிப்பகுதியான பெரிய நெசவுத்தெருவில் சிமெண்ட் கல்பதித்து சாலை அமைக்கும் பணிக்கு 24.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) திரு.ஆர்.தலவாணிமுத்து,
38 பூந்தோட்டம்
காயல்பட்டணம் — மதிப்பீடு ரேட்டை விட 0.02% குறைவு

2) திரு.டி.மாதவன்
20ஏ ஓடக்கரை
காயல்பட்டணம் — மதிப்பீடு ரேட்டை விட 0.24 % கூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்தலவாணிமுத்து,காயல்பட்டணம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**மன்ற பொருள் :12 தீர்மான எண் : 2034** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 40 வாட்ஸ் குழல் விளக்குகள் (Tube Light) | - | 1152 எண்ணம் |
| 150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | - | 119 எண்ணம் |
| 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | - | 150 எண்ணம் |
| 2x36 வாட்ஸ் சி எப் எல் விளக்குகள் | - | 108 எண்ணம் |
| உயர் கோபுர மின் விளக்குகள் | - | 5 எண்ணம் (48 விளக்குகள்) |
| மொத்தம் | - | 1535 எண்ணம் |

மேற்கண்டவாறு உள்ள நகராட்சி தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் பணி செய்ய தலைமைப்பொறியாளர்,நகராட்சி நிர்வாக ஆணையரகம்,சென்னை அவர்களின் கடிதம். நக. எண்.

45490/2013-9/DO3 நாள்.24.01.2014 ன்படி அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதன்படி ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ்,திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்பொழுது வரை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்பொழுது இந்நிறுவனத்தின் தெருவிளக்கு பராமரிப்பு காலம் 10.07.2020 உடன் முடிவடைகிறது. ஆனால் தற்பொழுது நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தையும் எல்.இ.டி விளக்குகளாக (Energy Saving Light) மாற்ற அரசின் மூலம் முடிவெடுக்கப்பட்டு அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது தெருவிளக்குகளை மாற்றுவதற்கு ஆகும் செலவினத்திற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணிக்கு தகுதியான நிறுவனங்களை தேர்ந்தெடுக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அவர்களின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s.Darashaw & Co.Private Limited, Bangalore என்ற நிறுவனத்தின் மூலம் நகராட்சியின் தெருவிளக்குகள் கணக்கீடு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளதால் தற்பொழுது காயல்பட்டணம் நகராட்சியின் தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் பணி செய்ய மீண்டும் மதிப்பீடு தயாரித்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டிய அவசியம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க தேவையான மின்பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினாலும் தெருவிளக்கு பணி அவசியமான பணியாக இருப்பதாலும் தற்பொழுது நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தையும் LED விளக்குகளாக மாற்ற அரசு முடிவெடுத்து பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியின் தெருவிளக்குகள் அனைத்தையும் LED விளக்குகளாக மாற்றும் பணிக்கான நடவடிக்கைகள் முடிவடையும் வரை நகர்மன்ற தீர்மானம் எண்.1817 நாள். 24.06.2019 ன்படி ரூ.27.97இலட்சத்திற்கு 10.07.2019 முதல் 09.07.2020 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்ய மன்ற அனுமதி பெறப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஏற்கனவே நகராட்சி தெருவிளக்குகளை பராமரித்து வரும் ஒப்பந்ததாரர் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ்,திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் மூலம் தற்பொழுதும் 10.07.2020 முதல் 09.07.2021 வரையிலான காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் M/s ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தின் கோரிக்கையின்படி ஏற்கனவே நகர்மன்ற தீர்மானம் எண்.1817 நாள்.24.06.2019 ன்படி அனுமதிக்கப்பட்ட முந்தைய வருடாந்திர செலவினத்தொகை ரூ.27.97 இலட்சத்துடன் கூடுதலாக 4.80% தொகை ரூ.1.35இலட்சத்தினையும் சேர்த்து 2020-2021ம் வருடத்திற்கு ரூ.29.32 இலட்சத்திற்கு பராமரிப்புத்தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றப்பொருள்: 13 **தீர்மான எண் : 2035** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் மற்றும் 14 Central Finance Commission திட்டங்களுக்கான திட்ட மதிப்பீடுகள் சமர்ப்பிக்க தேவையான சாலைகளின் போட்டோக்களை எடுத்து அதனை பிரிண்ட் செய்து திட்ட மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்ட வகைக்கு ஏற்பட்ட செலவினம் ரூ.7850/-ஐ நகராட்சி வருவாய் நிதியில் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றப்பொருள்: 14 **தீர்மான எண் : 2036** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் அரசின் மூலம் பல்வேறு திட்டங்களில் அடிப்படை வசதிகளான சாலைப்பணிகள் மழைநீர் வடிகால் பணிகள் தெருவிளக்குப்பணிகள் மேற்கொள்ள திட்ட நிதி ஒதுக்கீடு பெறும் பொருட்டு நகராட்சியின் தற்போதைய நிலைகளை நல்ல தரத்துடன் போட்டோ எடுத்து சமர்ப்பிக்கவேண்டியுள்ளதால் நகராட்சிக்கு சொந்தமாக நல்ல தரமான கேமிரா வாங்குவதற்கும் அதற்குரிய செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ஆணையாளர்(பொ)
(ம) தனி அலுவலர்
காயல்பட்டணம் நகராட்சி